**<u>சுருக்கம்</u>**

பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் – அம்பத்தூர் நகராட்சி – அம்பத்தூர் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் முதற்கட்டப் பணியினை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் வைப்புப் பணியாக செயல்படுத்த அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகின்றது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசு ஆணை(நிலை) எண்: 24 நாள் 02 .02. 2010

படிக்க:

1. அரசு ஆணை (2ப) எண்.81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22.05.2008.
2. அம்பத்தூர் நகர்மன்ற தீர்மானம் எண்.37, நாள் 29.5.2009.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.13390/ 05/ UGSS2, நாள் 17.08.2009.
4. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரிய தீர்மானம் எண்.249/2009, நாள் 24.9.2009.

------

**<u>ஆணை:</u>**

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அம்பத்தூர் நகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.130.91 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும், ரூ.4.67 கோடி மதிப்பீட்டில் ஆண்டு பராமரிப்பினை மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அம்பத்தூர் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் 40% முடிவடைந்துள்ள நிலையில் மீதமுள்ள பணிகளை ஒப்பந்த காலத்திற்குள் சில நடைமுறை காரணங்களினால் அந்நகராட்சியால் மேற்கொள்ள இயலவில்லை என்றும், எனவே ஒப்பந்தத்தை முன்முடிவு (Fore closure) செய்து மீதமுள்ள பணிகளை செய்வதற்கு புதிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பு பணிகளுக்கான மறுமதிப்பீட்டுத் தொகையான ரூ.23.10 கோடியை விட 60 முதல் 70% அதிகமாக இருந்ததால், இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் 2 மற்றும் 3–ம் கட்டப் பணிகள் மற்றும் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டப் பணிகள், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் செயல்படுத்தப்படுவதால், மேற்கண்ட முதற்கட்டப் பணியையும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் வைப்புப் பணியாக செயல்படுத்த முடிவெடுத்து அவ்வாறே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தீர்மானத்தில் அம்பத்தூர் நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்றும், எனவே அம்பத்தூர் நகராட்சியின் மேற்கண்ட செயற்குறிப்பினை பரிசீலித்து ஆணை வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கோரியுள்ளார்.

3. நான்காவதாகப் படிக்கப்பட்ட தீர்மானத்தில் இதுகுறித்து சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் வாரிய குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

4. மேற்கூறிய சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை அவ்வாறே ஏற்று அம்பத்தூர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் முதற்கட்டப் பணியினை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியம் மூலம் வைப்புப் பணியாக செயல்படுத்த அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் 31.1.2010 நாளிட்ட அ.சா.எண்.220/FS/P/10–ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சென்னை– 600 002.
மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், சென்னை – 600 017.
நகராட்சி ஆணையர், அம்பத்தூர் நகராட்சி. (நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 005 வழியாக)
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை– 600 108.
மாநிலக் கணக்காயர், சென்னை– 600 005.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 009/18.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலர் அலுவலகம், சென்னை–9.

**நகல்:**
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( அந.2) துறை, சென்னை– 600 009.
இ.கோ./உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.